**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு.M.சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, மானாமதுரை

2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 01ம் நாள் திங்கட்கிழமை

**I.A.No.4/2025**

**in**

**MCOP. No. 32/2020**

1. இருளாயி
2. மதயானை(இறப்பு)
3. கர்ணன்
4. கல்யாணசுந்தரம்
5. அமுதவள்ளி
6. சித்ரா
7. நர்த்தனா
8. அர்ஜூன் ராஜா

....மனுதாரர்கள்/மனுதாரர்கள்

/எதிர்/

1. ராஜூ
2. தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட்., அதன் கிளை மேலாளர் மூலம்., சிவகங்கை

.... எதிர்மனுதார்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 18.08.2025ம் தேதி என் முன்னர் வந்த போது மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இராஜசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், 2ம்எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் மனுவில் ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது

நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:–

**<u>உத்திரவு</u>**

இம்மனுவானது, அசல் மனுவின் 2ம் மனுதாரர் மதயாணையின் வாரிசுகளை அசல் மனுவில் தரப்பினராக சேர்க்க மனு 90 நாட்களுக்குள் தாக்கல் செய்யாததால் வழக்கு அற்றுப்போனதை நீக்கறவு செய்து உத்திரவிட வேண்டி கட்டளை 22 விதி 9 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

அசல் மனுவின் 2ம் மனுதாரர் 28.12.2022ல் இறந்துவிட்டார் என்றும் இறந்துபோன மதயானையின் வாரிசுகளாக மதயானையின் தாயார் இருளாயி, மனைவி சித்ரா மற்றும் மேற்படியாரின் பிள்ளைகளான நர்த்தனா, அர்ஜூன்ராஜா ஆகியோர்களை அசல் மனுவில் தரப்பினராக சேர்க்க 90 நாட்களுக்குள் மனுதாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் 4ம் மனுதாரர் தான் மற்ற மனுதாருக்கும் சேர்த்து மேற்ப்பார்வை பார்த்து வருவதாகவும் அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட காரணத்தினால் உரிய காலத்திற்குள் மனுத்தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் மேற்படி செயலும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் மதயானையின் வாரிசுகளை தரப்பினராக சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்றும் எனவே இறந்துபோன 2ம் மனுதார் மதயானையின் வாரிசுகளை அசல் மனுவில் தரப்பினராக சேர்க்க மனு 90 நாட்களுக்குள் தாக்கல் செய்யாமல் Abate ஆகிவிட்டதால் Abatement ஐ

Setaside செய்ய தகுந்த உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 2ம் எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகின்றன என்றும் அசல் மனுவில் 2ம் மனுதாரரான மதயானை 28.12.2022ந் தேதியில் இறந்து விட்டார் என்றும், உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்யாததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் மனுதாரருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது என்பதை நிரூபிக்க எந்தவிதமான ஆவணங்களும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேலும் உத்தேச மனுதாரர்கள் இறந்துபோன ராஜூவின் வாரிசுகள் கிடையாது என்றும், மேற்படி ராஜூ என்பவரை இந்த உத்தேச மனுதாரர்கள் எந்தக் காலமும் சார்ந்து இருக்கவில்லை என்றும் எனவே இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அசல் மனுவின் 2ம் மனுதாரர் மதயாணை 28.12.2022ல் இறந்துவிட்டார் என்றும் இந்த 4வது மனுதாரர் தான் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து வழக்கை நடத்தி வருவதாகவும் 4வது மனுதாரருக்கு உடல்நல குறைவு ஏற்பட்டதால் இறந்து போன மதயானையின் வாரிசுகளை உரிய நேரத்தில் சேர்க்காமல் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த 4ம் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும் உத்தேச மனுதாரர்கள் இறந்து போன ராஜூ என்பவரின் வாரிசுகள் இல்லை என்றும் அவர்கள் ராஜூ என்பவரை சார்ந்து எந்தக் காலமும்

இருக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது, மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது எதிர்மனுதார்கள் தரப்பில் இறந்து போன ராஜு என்பவரை சார்ந்து உத்தேச மனுதாரர்கள் இருக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ள நிலையில் உத்தேச எதிர்மனுதாரர்கள் இறந்து போன ராஜு என்பவரை சார்ந்து இருந்தார்களா இல்லையா என்பதை அசல் மனுவில் முழு விசாரணைக்கு பின்பு தான் முடிவு செய்ய முடியும். மேலும் 4வது மனுதாரருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்த வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள போதிலும் 4வது மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதமாகவும் அசல் மனுவில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர்

திங்கள் 01ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.